லாஹுகல பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 20 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாஹுகல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றின் செலவினம் ரூபா 7,569,525 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,653,825 ஆக இருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 84,300 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய பிரயாணச் செலவினம் ரூபா 93,692 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 95,612 ஆக ரூபா 1,920 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 572,442 ஆக இருந்த போதிலும் ரூபா 569,416 ஆக வருமானச் செலவினக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 3,026 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

ரூபா 52,142,151 கூட்டுப்பெறுமதியான 07 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் 150(4) ஆம் பிரிவு | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு | |
| (i) விதி 59 - 66 | பிரதேசத்தில் மெய்மையாய்வு மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிடவேண்டிய கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான ரூபா 50,764,825 தொகையான காணியும் கட்டிடமும் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 118,301 கூட்டுத்தொகையான 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற முன்னைய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,037,910 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,142,861 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 2,180,771 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்தபோது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் என்பன வருமான நிதி மூலத்தில் 27 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும், ஏனைய வருமானங்களிலும்

மானியங்களிலும் 13 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையிலான அதிகரிப்பையும் காண்பித்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளும், பிரயாணச் செலவினம், போக்குவரத்து தொடர்பாடல், பயன்பாடும் ஏனைய சேவைகளும் போன்ற செலவினங்களில் 9 சதவீதம் முதல் 159 சதவீதம் வரையிலான அதிகரிப்பும், மூலனச் சொத்துக்களைப் பராமரித்தல், உதவித் தொகைகள் மற்றும் மானியம் போன்ற செலவினங்களில் 17 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலான குறைவையும் காண்பித்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வாடகை | 350 | 61 | 200 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 205 | 114 | 26 |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 3,001 | 203 | - |
| ஏனைய வருமானம் | 320 | 225 | - |

### 2.3.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 26,983 தொகை சில வருடங்களுக்கு முன்பிருந்தே கிடைக்க வேண்டியிருந்த போதும் அப்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானம்

தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்தும் விளம்பர பதாதைகளிலிருந்தும் வருமானத்தைச் சேகரிப்பதற்குத் தேவையான உப விதிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையின் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானம் அண்ணளவாக ரூபா 7,500 இனை சபை இழந்திருந்தது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் இனங்காணப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குரிய நூலகங்களில் 2014 திசெம்பர் முடிவடையும் போது 1537 புத்தகங்கள் தொலைந்து போயிருந்ததுடன் அந்த புத்தகங்களில் பெறுமதி இனங்காணக்கூடிய 1040 புத்தகங்களின் பெறுமதி ரூபா 94,765 ஆகும். நூலகப் புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்லுதல் தொடர்பாக முறையான திட்டமொன்று ஸ்தாபிக்கப்படாமையால் ஆண்டு தோறும் புத்தகங்கள் காணாமல் போதல் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) 10 வருடங்களுக்கு முன்பிலிருந்து அகற்றுவதற்கு பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட 933 புத்தகங்களை அகற்றுவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தற்போது சபையில் காணப்படுகின்ற 20 வாகனங்களில் கெப்வண்டியைத் தவிர ஏனைய சகல வாகனங்களையும் சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் தண்ணீர் பவுசறை பழுதுபார்ப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் பவுசர் மீண்டும் சபைக்கு கிடைக்காதிருந்ததுடன் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் பிரகாரம் குறித்த மாதிரிப் படிவத்தின் படி வருமானப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்